**சுருக்கம்**

பள்ளிக்கல்வி – பொது நூலகங்கள் – 2018–19–ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள்– மாவட்டங்கள் தோறும் "முனைவர் எஸ்.ஆர். அரங்கநாதன் விருதின் பரிசுத் தொகையினை உயர்த்தி" வழங்குதல்– ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக்கல்வி (பொ.நூ.1)த்துறை**

**அரசாணை (நிலை) எண்.125** நாள் 27.06.2018

திருவள்ளுவராண்டு, 2049
விளம்பி வருடம், வைகாசி–13

படிக்கப்பட்டவை:–

பொது நூலக இயக்குநரின் கடித ந.க.எண். 5752/உ1/2018, நாள் 05.06.2018.

~*~~*~

**ஆணை:–**

2018–19–ஆம் ஆண்டிற்கான பள்ளிக்கல்வித் துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்கள்:–

"அர்ப்பணிப்பு உணர்வுடன் சிறப்பாகச் செயலாற்றி வரும் நூலகர்களைப் பாராட்டி கௌரவிக்கும் வகையில், ஆண்டுதோறும் சிறந்த நூலகர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, ரூ.2,000 பரிசுத் தொகை மற்றும் வெள்ளிப்பதக்கம் வழங்கப்பட்டன. வரும் ஆண்டு முதல் முனைவர். எஸ்.ஆர்.அரங்கநாதன் விருது, வெள்ளிப்பதக்கத்துடன் பரிசுத்தொகை ரூ.5,000 ஆக உயர்த்தி வழங்கப்படும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி இத்திட்டத்திற்கு ரூ.0.99 இலட்சம் செலவிடப்படும்"

2. பொது நூலக இயக்குநர் மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், அர்ப்பணிப்பு உணர்வுடன் சிறப்பாகச் செயலாற்றி வரும் நூலகர்களைப் பாராட்டி கௌரவிக்கும் வகையில், ஆண்டுதோறும் சிறந்த நூலகர்கள் தேர்தெடுக்கப்பட்டு, அரசாணை (நிலை) எண்.201, பள்ளிக் கல்வித்(கே1)துறை, நாள் 22.07.2010–இன்படி தேசிய நூலக வார விழாவில் ரூ.2,000/– ரொக்கப்பரிசு வெள்ளி பதக்கம் அடங்கிய முனைவர் எஸ்.ஆர்.அரங்கநாதன் விருது வழங்கி வருவதனை 2018–ஆம் ஆண்டு முதல் சிறந்த நூலகர்களை மேலும் ஊக்குவிக்கும் வகையில் வெள்ளிப்பதக்கத்துடன் ரொக்கப்பரிசுத் தொகை ரூ.5,000/– என உயர்த்தி வழங்க அனுமதியும், அதற்கான செலவினம் ரூ.99,000/– ஐ (ரூபாய் தொன்னூற்றொன்பது ஆயிரம் மட்டும்) மாவட்ட நூலக ஆணைக்குழு நிதி மற்றும் கன்னிமாரா பொது நூலக வளர்ச்சி நிதியிலிருந்து பெற்று அப்பணியை மேற்கொள்ள அனுமதி அளித்து ஆணை வழங்குமாறு அரசினை கோரியுள்ளார்.

3. பொது நூலக இயக்குநரின் கருத்துரு அரசால் பரிசீலிக்கப்பட்டு, அதனை ஏற்று, 2018–19ஆம் ஆண்டின் அறிவிப்பான "முனைவர் எஸ்.ஆர். அரங்கநாதன் விருதின் பரிசுத் தொகையினை உயர்த்தி" வழங்குதல் என்ற அறிவிப்பினை செயல்படுத்திட, அர்ப்பணிப்பு உணர்வுடன் சிறப்பாகச் செயலாற்றி வரும் நூலகர்களைப் பாராட்டி கௌரவிக்கும் வகையில்,

(த.பி.பா.)

ஆண்டுதோறும் சிறந்த நூலகர்கள் தேர்தெடுக்கப்பட்டு, அரசாணை (நிலை) எண்.201, பள்ளிக் கல்வித்(கே1)துறை, நாள் 22.07.2010–இன்படி தேசிய நூலக வார விழாவில் ரூ.2,000/– ரொக்கப்பரிசு வெள்ளி பதக்கம் அடங்கிய முனைவர் எஸ்.ஆர்.அரங்கநாதன் விருது வழங்கி வருவதனை, 2018 ஆம் ஆண்டு முதல் சிறந்த நூலகர்களை மேலும் ஊக்குவிக்கும் வகையில் வெள்ளிப்பதக்கத்துடன் ரொக்கப் பரிசுத் தொகை ரூ.5,000/– என உயர்த்தி வழங்க அனுமதியும் அதற்கான செலவினம் ரூ.99,000/– ஐ (ரூபாய் தொன்னூற்றொன்பது ஆயிரம் மட்டும்) மாவட்ட நூலக ஆணைக்குழு நிதி மற்றும் கன்னிமாரா பொது நூலக வளர்ச்சி நிதியிலிருந்து பெற்று அப்பணியை மேற்கொள்ளவும் பொது நூலக இயக்குநருக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண். 2011/கூ.த.செ.(நிதி)/2018, நாள் 12.06.2018ல் பெற்ற இசைவுடன் வெளியிடப் படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பொது நூலக இயக்குநர் (கூ.பொ), சென்னை – 2.
<u>நகல்:–</u>
முதன்மைச் செயலாளர்,
சிறப்புத் திட்ட அமலாக்கத்துறை, சென்னை–9.
நிதி (கல்வி–II)த்துறை, சென்னை–9.
பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
பள்ளிக்கல்வித் துறை
முதன்மைச் செயலாளர் அவர்களின்
முதன்மைச் தனிச் செயலர், சென்னை–9.
பள்ளிக்கல்வி (வரவு செலவு)த்துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி கோப்பு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.